(Reg. No. 961/1997)

**செய்திமடல்**

**நோபல் லாரேட்**

# அன்னை தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட்

துணை அமைப்பு

## அன்னை தெரசா பேரவை

அலுவலகம் :43, நெல்சன்மாணிக்கம் சாலை, சூளைமேடு, சென்னை –600 094
**போன்: 91-44-23743883 Fax: 91-44-23742699 Web: www.motherteresacharities.org**
Email: motherteresain@yahoo.co.in / mtctindia@yahoo.co.in

**சென்னை ஆகஸ்ட் 4, 2010**

பேரன்புடையீர்,

வணக்கம் கடந்த மாத செய்திமடல் மீது தங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

அன்னை தெரசா அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடுமாறு தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு நமது பேரவை உறுப்பினர்கள் கோரப்பட்டிருந்தார்கள் அதன்படி பல்வேறு மாநிலங்களிலும் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்துவருகிறார்கள் என்ற மகிழ்வான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்னை தெரசா அவர்களால் கல்கத்தாவில் ஆரம்பிக்கப்பட்ட **மிஷனரீஸ் ஆப் சாரிட்டி** என்ற அமைப்பும் **அன்னை தெரசா அவர்களின் நூற்றாண்டு விழாவினை** பல்வேறு சமூகநல அமைப்புகளுடன் இணைந்து கல்கத்தா, மற்றும் அனைத்து மாநிலங்களிலும் நடத்த ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. தலைநகர் டில்லியில் CBCI என்ற அமைப்பு அன்னை தெரசா நூற்றாண்டு துவக்கவிழாவை நடத்துகிறது. 23.8.2010 அன்று துவக்கி பல்வேறு விழாக்கள் கொண்டாடுவதோடு தொடர்ந்து 29.8.2010 வரை நடைபெறுகிறது. 28.8.2010 அன்று நடைபெறும் விழாவில் இந்திய குடியரசு தலைவர் **திருமதி பிரதிபா பாட்டில்,** நிதிஅமைச்சர் **திரு.பிரணாப்முகர்ஜி** மற்றும் பல்வேறு **அமைச்சர் பெருமக்களும், முக்கிய பிரமுகர்களும்** கலந்து கொள்கிறரார்கள். அதேபோல சென்னையில் **அன்னை தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட்** சார்பில் பெரிய அளவில் விழா நடத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளபட்டு வருகின்றன.

மேலும் நமது அன்னை தெரசா பேரவை மற்றும் அதன் தாய் அமைப்பான அன்னை தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட் ஆகியவை இன்று பல நல திட்டங்களை இந்தியாவில் தேவைகள் நிறைந்த பல பகுதிகளில் நிறைவேற்றிக் கொண்டிருப்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சி ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் நாம் செய்கின்ற சமுதாய பணியில் பெருமை சேர்ப்பதாகும்.

நாம் ஏற்கனவே நிர்ணயித்தது போல தமிழகத்தில் மட்டும் 3 லட்சம் உறுப்பினர்களை சேர்ப்பதற்கான பணி ஆரம்பிக்கப்பட்டு மாவட்டங்கள் தோறும் அமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. உறுப்பினர்கள் சேர்க்கும் பணி துரிதமாக நடைபெற்று வரும் செய்தியை தங்களிடம் மகிழச்சியுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமிதமடைகிறேன். இவ்விதமான பணி **மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா, ஜார்கண்ட்** மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களிலும் தொய்வின்றி மும்முரமாக நடைபெற்று வருகிறது. மேலும் இலங்கையிலும் நமது பேரவையின் உறுப்பினர் படிவம் அனுப்பப்பட்டு உறுப்பினர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

மேலும் இலங்கையில் கிளை அலுவலகம் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. அண்மையில் நான் இலங்கை சென்றிருந்த போது அந்நாட்டின் சமூகநலத்துறை அமைச்சர் **திரு.பிலிக்ஸ் பெரேரா** அவர்களையும், அத்துறையின் செயலாளரையும் சந்தித்தேன். அவர்கள் இலங்கையில் அன்னை தெரசா பேரவை மேற்கொள்ளும் நலத்திட்டங்களுக்கு ஊக்கமளிப்பதாகவும், அனைத்து உதவிகளையும் வழங்குவதாகவும் உறுதி அளித்துள்ளார்கள். தற்போது இலங்கையில் **திரு.நிக்கல்சன்** மற்றும் **திரு.சந்தானம்** ஆகியவர்கள் தொடர்ந்து அன்னை தெரசா பேரவையின் செயல்பாடுகளை செயல்படுத்தி வருகிறார்கள்.

கடந்த இதழில் கூறியது போல தேசிய அளவில் நமது நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்ற மகிழ்வான செய்தியை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். அகில இந்திய தலைவராக பம்பாயைச் சேர்ந்த **திரு. ரால்ப்மேனன்** அவர்களும், துணைத்தலைவர்களாக **திரு. Col.அனில்சாவ்லா, Dr. தயாதேவதாஸ், திரு.R.S. முத்து**, பொதுசெயலாளராக **திரு.A.ராஜாசிங்**, துணைப்பொது செயலாளர்களாக **திரு.கிரிஸ் திரிபாதி**, **Dr.ராஜேஸ் சத்தியா** ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும், நமது அறக்கட்டளை மற்றும் பேரவைக்கு வழிகாட்டுவதற்கும், ஆலோசனை வழங்குவதற்காகவும், Governing Board ஒன்று ஏற்படுத்தப்படுகிறது. அதில் சில மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் சிறப்பு பிரதிநிதிகள் இடம்பெறுவார்கள். விரைவில் அவர்களின் பட்டியலும் இறுதியாக்கப்பட்டு தங்களுக்கு தெரிவிக்கப்படும். மேலும் தமிழக மாநில கமிட்டியும் விரைவில் மாற்றியமைக்கப்பட உள்ளது.

அதேபோல், பல்வேறு மாவட்டங்களிலும் நமது செயல்வீரர்கள் வேகமாக உறுப்பினர் சேர்த்து கிளைகமிட்டி அமைத்து வருகிறார்கள் என்ற செய்தி நமக்கெல்லாம் மகிழ்வளிப்பதாக உள்ளது. அண்மையில் VIT பல்கலைகழகம் SRM பல்கலைக்கழகம், மற்றும் சென்னை சட்ட கல்லூரி ஆகியவற்றிலிருந்து மாணவர்கள் நம் அலுவலகத்திற்கு நேரடியாக வந்து நமது செயல்பாடுகளை விரிவாக கேட்டறிந்தார்கள். தற்போது அனைத்து பல்கலைகழகங்களிலும் கல்லூரிகளிலும் அன்னை தெரசா பேரவையின் மாணவர் அமைப்பு கிளை ஆரம்பிப்பதற்கான பணி தொடங்கப்பட்டுள்ளது.

எனவே தங்கள் பகுதிகளிலும் ஒவ்வொரு கல்லூரி, பள்ளிக் கூடங்களிலும் மாணவர் அமைப்பை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இது மாணவர் மத்தியில் சேவை மனப்பான்மையை உருவாக்கவும், ஏழை மாணவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவும் வாய்ப்பாக அமையும்.

மேலும் மாவட்ட தலைவர்கள் தங்கள் மாவட்டத்தில் செயல்பாடு இல்லாத நிர்வாகிகளை மாற்றி புது நிர்வாகிகள் நியமனம் செய்வதற்கான பரிந்துரையை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நமது இலக்காகிய மாவட்டத்திற்கு 10,000 உறுப்பினர் என்ற இலக்கை எட்ட முடியாத மாவட்டத்தலைவர்களை மாற்றி பதிய தலைவர்கள் நியமிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும், வட்டத்திலும், கிராமத்திலும் தற்போது நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகிகள் (தலைவர் உட்பட) செயல்பாடுகள் குறைவாக இருப்பின் அந்தந்த

மாவட்டத்தில் செயல்படும் நிர்வாகிகள் தலைமை அலுவலகத்ததை தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அன்னை தெரசா அவர்களின் நூற்றாண்டு விழாவினை இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடுமாறு நமது அறகட்டளையின் மூலம், அந்தந்த மாநில அரசுகள்பிற தொண்டு நிறுவனங்கள், நம் அன்னை தெரசா பேரவை கிளைகள் ஆகியவற்றிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம் இதனை ஏற்று பல்வேறு மாநிலங்களில் விழாவிற்கான ஏற்பாடுகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறன்றன. தமிழ் நாட்டிலும் வருகிற **26.8.2010** முதல் **25.8.2011** வரையிலான ஓராண்டு காலத்திற்கு தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடத்தப்படவேண்டும். நலஉதவிதிட்டங்கள், பள்ளி கல்லூரி பல்கலைகழக நிகழ்ச்சிகள், மாணவர் பேரணிகள், கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் என பல்வேறு நிகழ்சிகளை நடத்துவதன் மூலம் அன்னை தெரசா நூற்றாண்டு விழாவிற்கு புதுப்பொலிவு ஏற்படுத்தவேண்டும். நூற்றாண்டு துவக்க விழாவான வருகிற **26–**ம்தேதி அன்று கிராமம் தோறும் அன்னதான நிகழ்சிகளும், மருத்துவ நல உதவித்திட்டங்களும் நடத்த ஏற்பாடு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சியின் CD க்கள் போட்டோக்களை தலைமை அலுவலகத்திற்க்கு உடனுக்குடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அவற்றில் தகுதி வாய்ந்தவை நமது இணையதளத்தில் பிரசுரிக்கப்படும். எனவே இந்த பணிகளை இன்றே துவக்குமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நமது செயல்பாடுகள் மக்கள் மத்தியில் சென்றடையும் விதமாக, நிகழ்ச்சிகள் அமையவேண்டும்.

நமது அன்னை தெசா பேரவையின் சட்டதிட்டங்கள் மாவட்ட தலைவருக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும் அதில் பிரதி எடுத்து அதன்படி செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மாவட்ட தலைநகர்களில் இதுவரை அலுவலகம் இல்லாத ஊர்களில் உடனடியாக அதற்கான பணியினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் பகுதியில் சேவையில் ஆர்வமுள்ளவர்கள் இருந்தால் அவர்களை கண்டறிந்து அவர்களை நம் பேரவையில் சேர்க்க முயற்சி மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், நம்முடைய செயல்பாடுகளை ஊக்குவிப்பதற்காக யாராவது நன்கொடை வழங்க முன்வந்தால் அதைப்பெற்று தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு (under Sec.80G) உண்டு.

தற்போது நன்கொடைகள் நமது இணையதளத்தின் மூலம் (www.motherteresacharities.org) கிரெடிட் கார்டு, டெபிட்கார்டு மூலமாகவும் அனுப்பலாம் காசோலை மூலமாகவோ, அல்லது நாம் கணக்கு வைத்திருக்கும் வங்கிகளின் கிளைகள் மூலமாகவும் அனுப்பலாம். இந்த நன்கொடைகள் ஏழை எளிய மக்களை சென்றடையும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நன்றி,**

**"Service to mankind is Service to God"**

அன்புடன்,

**ஜி.கே.தாஸ்**
மேனேஜிங் டிரஸ்டி